Registerd as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி
நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 8 | [22-06-93] | செவ்வாய்க்கிழமை | ஓசை 124

## 10ஆயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர் புதிதாக நியமிக்க அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்குள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பத்தாயிரம் பேருக்கு புதிதாக நியமனங்கள் வழங்கப்பட விருக்கின்றன. தமிழ் ஆசிரியர் பற்றாக்குறை குறித்து அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச் சேவை சபை கல்வி உயர் கல்வி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி புதிய நியமனங்கள் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. தோட்டப் பாடசாலைகளுக்காக தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் ஆயிரம் பேரையும் ஏனைய பிரதேச பாடசாலைகளுக்காக தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் நாலாயிரம் பேரையும் நியமிக்குமாறு சிபார்சு செய்து மந்திரி சபைக்கு இரு அறிக்கைகளைச்

(4ஆம் பக்கம் பார்க்க)



யுத்தக்கைதிகளின்விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் குறித்து விடுதலைப்புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனும் சிறிலங்கா அரசின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைப் படத்தில் காணலாம். <—

தம்மைவிடுவிக்குமாறுகோரி சிறிலங்கா அரசிற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதத்தைமேற்கொண்டிருந்தயுத்தக் கைதிகளுக்கு சிறிலங்கா அரசின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதை படத்தில் காணலாம். —>



# பொருளாதாரத் தடை அரசால் நீக்கப்பட்டது; விடுதலைப் புலிகளின் நிபந்தனை ஏற்பு!

## அகிம்சைப் போருக்கு தலைவரின் கௌரவம்

(யாழ்ப்பாணம்)

"அகிம்சை தத்துவத்தின் ஆத்மீக அறத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எப்பொழுதும் மதிப்பளிக்கும் என கைதிகளின் விடுதலை தொடர்பாக தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

மேலும் தியாகி திலீபன், அன்னை பூபதி

## கைதிகளை விடுவிக்க புலிகள் முடிவு

[யாழ்ப்பாணம்]

போர்க் கைதிகளை விடுவிப்பதற்கு பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. பேச்சுவார்த்தையின் போது தடைகள் நீக்கப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிய பொருள்கள் மீதான தடையை கூட்டுப்படை தலைமையகம் நீக்கச் சம்மதித்துள்ளது. இதனை கூட்டுப்படைகள் நடவடிக்கை தலைமையகத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா எழுத்து மூலமாக விடுதலைப்புலிகளுக்குத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் இம்முடிவை அடுத்து போர்க் கைதிகளை விடுதலை செய்ய

# பொருளாதாரத் தடை அரசால் நீக்கப்பட்டது,

# விடுதலைப் புலிகளின் நிபந்தனை ஏற்பு!

## அகிம்சைப் போருக்கு தலைவரின் கௌரவம்

(யாழ்ப்பாணம்)

"அகிம்சை தத்துவத்தின் ஆத்மீக அறத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எப்பொழுதும் மதிப்பளிக்கும் என கைதிகளின் விடுதலை தொடர்பாக தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

மேலும் தியாகி திலீபன், அன்னை பூபதி ஆகியோரின் அறப்போராட்டத்தை நினைவு கூர்ந்த தலைவர், இப்போராட்டத்தின் மகத்துவத்தை இந்தியா உணரவில்லை என்றும், ஆனால் புலிகள் இயக்கம் இப்போராட்டத்தின் புனிதத்திற்கு மதிப்பளித்திருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

## கைதிகளை விடுவிக்க புலிகள் முடிவு

[யாழ்ப்பாணம்]

போர்க் கைதிகளை விடுவிப்பதற்கு பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. பேச்சுவார்த்தையின் போது தடைகள் நீக்கப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிய பொருள்கள் மீதான தடையை கூட்டுப்படை தலைமையகம் நீக்கச் சம்மதித்துள்ளது. இதனை கூட்டுப்படைகள் நடவடிக்கை தலைமையகத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா எழுத்து மூலமாக விடுதலைப்புலிகளுக்குத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் இம்முடிவை அடுத்து போர்க் கைதிகளை விடுதலை செய்ய தலைவர் பிரபாகரன் சம்மதித்துள்ளார்.

நேற்று பிற்பகல், விடுதலைப் புலிகளுக்கும், ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிற்கும் இடையில் இடம்பெற்ற இரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போதே பொருளாதாரத் தடை நீக்கம் - கைதிகளின் பரிமாற்றம் தொடர்பாக இணக்கம்காணப்பட்டது. இப்பேச்சுவார்த்தைகள் நேற்று மாலை 3-30—4-30 வரை ஒரு சுற்றும், மறுசுற்று 6-00—7-00 மணி வரையிலும் இடம் பெற்றது.

இப்பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோரும், அரசாங்கத் தரப்பில் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் கலந்து கொண்டனர்.

புலிகளுடன்பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நேற்று முன்தினம் கொழும்பு சென்ற பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா அங்கு நடைபெற்றஉயர்மட்ட கூட்டத்தில் கலந்து கொண்டார். பின்னர் அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுடன் நேற்று பலாலி ஊடாக பருத்தித்துறை வந்தடைந்தார்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்த பிரிகேடியர் வீரசேகரா, புலிகளுடன் இருசுற்றுப் பேச்சுக்களை நடத்தினார். இப்பேச்சுக்களின் போது கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட அரசாங்கத்தின் முடிவுகளை விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கட்டம் கட்டமாக கைதிகள் விடுதலையாவர்

### ஐவர் இன்று விடுதலை

சிறிலங்கா அரசு வடபகுதி மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையை நீக்க இணங்கியதை அடுத்து விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள யுத்தக் கைதிகளை கட்டம்கட்டமாக விடுவிக்க விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் முடிவு செய்துள்ளார்.

தடை நீக்கப்பட்ட பொருள்கள் வடபகுதிக்கு வந்து சேர்வதைத் தொடர்ந்து ஏனைய யுத்தக் கைதிகளும் விடுவிக்கப்படுவர்.

இதன் முதற்கட்டமாக ஐந்து யுத்தக் கைதிகள் இன்று காலை விடுவிக்கப்பட உள்ளனர். இவர்கள் தம்மை பார்வையிட வந்திருக்கும் பெற்றோர் - உறவினர்களுடன் பருத்தித்துறை துறைமுகமூடாக சொந்த இடங்களுக்கு செல்ல உள்ளனர். இவர்களை யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அழைத்துச் செல்வார்.

## அவசர மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு

(வடமராட்சி)

"கொழும்பில் அவசரமாக கூட்டப்பட்ட ஜனாதிபதி அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையே நான் எடுத்து வந்துள்ளேன். இதனை விடுதலைப் புலிகளுக்கு தெரிவிப்பேன்" என பிரிகேடியர் ஆனந்த வீரசேகர எமது வடமராட்சி செய்தியாளருக்கு பருத்தித்துறை இறங்கு துறையில் வைத்து நேற்று தெரிவித்தார்.

கைதிகள் விடுவிப்பு பொருளாதார தடைநீக்கம் என்பன பேச்சுவார்த்தையின் போது இடம்பெறும் என மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை போர்க்கைதிகளை விடுவிக்க அரசு பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்ததையடுத்து அது குறித்து அரசுடன் ஆலோசிக்க கொழும்பு திரும்பிய பிரிகேடியர் ஆனந்தவீரசேகர உடனடியாகவே உயர்மட்ட மாநாட்

( 4ஆம் பக்கம் பார்க்க )

## தடை நீக்கப்பட்ட பொருள்களின் விபரம்

(கொழும்பு)

பொருளாதாரத்தடை நீக்குவது தொடர்பாக கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க 20 ஆம் திகதி கையெழுத்திட்ட கடிதம் ஒன்று வெளியாகியுள்ளது.

இவ்வறிவித்தலில் சில பொருள்கள் மீதான தடை நீக்கம் குறித்து விபரிக்கப்பட்டுள்ளது, விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 39 கைதிகளையும் விடுவிப்பது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினூடாக 1993 ஜூன் 19ஆம் திகதி முற்பகல் 11-40 மணிக்கு அனுப்பப்பட்ட செய்தி தொடர்பாக கூட்டுப்படைத் தலைமையகம் அதற்கு பதிலாக பின்வருவனவற்றுக்கு இணங்குகிறது:-

1. மருந்துப் பொருள்கள்:- தேவையான அனைத்து மருந்து பொருள்களும் சுகாதார சேவை இயக்குனர் ஊடாக விநியோகிக்கப்படும். யாழ். குடாநாட்டு சுகாதார அதிகாரிகள் தமக்கு தேவையானவற்றை தெரிவு செய்யலாம் கூட்டுப்படைத் தலைமையகம் அவர்களுக்கான விநியோகம் குறித்து எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காது.

2. பெற்றோல், எண்ணெய், என்ஜின் எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் வடக்கிற்கு பெற்றோல், எண்ணெய், தேங்காய் எண்ணெய்:- என்ஜின் எண்ணெய் என்பவை பொருத்தமான அதிகாரிகளால் வழங்கப்படுவது குறித்து கூட்டுப்படைத் தலைமையகம் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காது.

3. துவிச்சக்கர வண்டிகள்:- வடக்கிற்கு மேலதிகமாக

(4ஆம்பக்கம் பார்க்க)

## சாகும்வரை நோன்பை கைதிகள் கைவிட்டனர்

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாவிரதமிருந்த சிங்கள யுத்தக்கைதிகள் தமது போராட்டத்தை நேற்று கைவிட்டனர்.

ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் வீரசேகராவுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நேற்று இரவு 8-30மணியளவில் கைதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

பிரிகேடியர் வீரசேகரா யுத்தக்கைதிகளுக்கு பழரசம் வழங்கி உண்ணா விரதத்தை முடித்து வைத்தார். உண்ணா விரதத்தை முடித்து வைக்கும் வைபவத்தில் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி, யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர், டாக்டர் சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் திரு. அன்ரன் பாலசிங்கம் கைதிகள் மத்தியில் உரைநிகழ்த்தினார். நீங்கள் மேற்கொண்ட அகிம்சை வழிப் போராட்டமானது உங்களதுவிடுதலைக்கு

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும்

பல பொருள்கள் மீதான தடையை நீக்குவது என சிறிலங்கா அரசு இணங்கியதை அடுத்து இதுகுறித்துவிரைவில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிடுவது எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

நேற்று சிறிலங்கா அரசின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவிடம் இது குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வற்புறுத்தியதை அடுத்து உறுதிமொழி வழங்கப்பட்டது.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## அவசரமாக யாழ். திரும்பிய பிரிகேடியர் வீரசேகரா

(வடமராட்சி)

சிறிலங்கா ஜனாதிபதியின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா மீண்டும் நேற்று பகல் 1.30 மணியளவில் பருத்தித்துறை வந்தடைந்தார். இவருடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் உடன் வந்தார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தை விபரங்களை டி. பீ. விஜயதுங்காவிற்கு தெரியவைத்ததாகவும் தற்போது அரசாங்கத்தின் முடிவை எடுத்து வந்துள்ளதாகவும் அவர் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து எமது

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனை முகவர் தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கரவண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல்பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (சி-6862)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-6733)

### யாழ் பல்கலைக்கழகம்

கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியம்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உயர்தர வகுப்புகளிற்கான விஞ்ஞான, கணித பட்டதாரி ஆசிரியர்களுக்கான

பதவி வெற்றிடங்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் உயிரியல் விஞ்ஞான, பௌதிகவியல் விஞ்ஞான அல்லது கணிதவியல் பட்டதாரிகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 02-07-1993 வெள்ளிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம், யாழ்ப்பாணப் பல்


# கலாசார மரபு வேறுபட்டால் தன்னாதிக்கம் அவசியமாகும்

**- ரொனி அன்ஹி**

[கொழும்பு]

கலாசார உரிமையைப் பொறுத்தவரையில் ஒரு வித்தியாசமான கலாசார மரபை உடைய மக்கள் இதனை ஒரு குழுவாக வைத்திருப்பதற்கு உரிமை உடையவர்கள். இந்தக் குழு உரிமை, இறைமை இல்லாதவிடத்து தன்னாதிக்கத்தை நோக்கி இட்டுச் செல்வதாக அமைக்கப்பட வேண்டும். ஒரு குழு என்ற முறையில் அரசாங்கம் எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்கக் கூடிய அதிகாரத்தை இந்த உரிமை மக்களுக்கு வழங்க வேண்டும்

இவ்வாறு ஹார்ட்வார்ட் சட்டக் கல்லூரியின் கலாநிதி பட்ட மாணவரான ரொனி அன்ஹி தெரிவித்தார். கொழும்பிலுள்ள லோ அன்ட் சொசைட்டி ரஸ்ட் நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் ''கலாசார அடையாளத்திற்கான உரிமை இன வன்செயலுக்கான புதிய அணுகுமுறை'' என்னும் தலைப்பில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

சிவில் அரசியல் உரிமைகளுக்கான சாசனத்தின் 27வது பிரிவு சிறுபான்மையினர் ஒரு நாட்டிற்குள் தமது குழுவைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளவும், தமது சொந்தக் கலாசாரத்தைக் கடைப்பிடிக்கவும் தமது சொந்த மதத்தைக் கடைப்பிடிக்கவும் உரிமையுடையவர்கள் எனக் கூறுகின்றது.

ஆனால், சர்வதேச சட்டத்தினுள் அரசிற்கு எதிராக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடிய எந்த விதிமுறையும் இல்லை இந்தக் குறைபாட்டினால் கலாசார உரிமைகளை பாதுகாக்கவென அமைக்கப்பட்ட நிறுவனங்களால் அவை பாதுகாக்கப்படாமலேயே விடப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

## கைதாகும் இளைஞர்களின் அவஸ்தையை போக்கவும்

**அஷ்ரப் அஸீஸ் கோரிக்கை**

[கொழும்பு]

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படும் தமிழ் இளைஞர்களின் அவஸ்தையைப் போக்க ஆவன செய்ய வேண்டும் என்று அஸீஸ் அமைப்புகளின் தலைவர் அஷ்ரப் அஸீஸ் அறிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கொழும்பிலும் அதன் சுற்றுபுறங்களிலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யபபட்டு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். தமிழ் மக்கள் பல மாவட்டங்களிலிருந்தும் கொழும்பு வருகிறார்கள். தொழில் புரிவோரும், விருந்தினராக வந்தவர்களும் கூட கைது செய்யப்பட்டு விசாரணையின்றி விடுவிக்கப்படாமலும் இருப்பதாக அறிய வருகிறது.

கைது செய்யப்படும் நபர்களை அவர்கள் வாழும் மாவட்டங்களின் பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைத்தால் அவர்களை விசாரணைக்குட்படுத்தி விடுதலை செய்ய இலகுவாக இருக்கும். அவர்கள் சிரமங்களில் இருந்து விடுபடவும் வாய்ப்பாக அமையும்.


### ★ A/L 94

கணக்கியல் பகுதி I

புதிய அலகுடன் ஆரம்பமாகின்றது.

ஆரம்பம் : 24-06-93 மாலை 5.00 மணி

✱ 95 கணக்கியல்

புதிய பிரிவு

ஆரம்பம் : 24-06-93 மாலை 8.00 மணி

ஆசிரியர் : திரு. V. உருத்திரசிங்கம்

விபரங்களுக்கு :

பட்டப்படிப்புகள் கல்லூரி

57 / 48, ஸ்ரான்லி வீதி,

[இலங்கை வங்கி முன்பாக]

யாழ்ப்பாணம்.

[சி-6879]


## செயலமர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில ''அளவை இயலும் விஞ்ஞான முறையும்'' என்கின்ற பாடத்தை க. பொ. த. (உ/தர) வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கு ஒரு செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் 25ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் ''அளவை இயலும் விஞ்ஞான முறைகளும்'' கற்பிக்கும் ஆசிரியர்களை பங்குபற்றுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். [பா]

## போதைப்பொருள் எதிர்ப்பு தினம்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் கொண்டாடப்படும் சர்வதேச தினங்களில் ஒன்றாகிய 'போதைப் பொருள் எதிர்ப்பு தினம்' இம் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சம்மேளன காரியாலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், கல்விமான்கள் மற்றும் பெரியோர்கள் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

## கணக்கியல் கருத்தரங்கு

(தொல்புரம்)

வட்டு இந்துக்கல்லூரி வர்த்தக மாணவ மன்றத்தினால் க. பொ. த.ப உயர்தர வகுப்புகளிற்கான கணக்கியல் பாட கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

மேற்படி கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில், கல்லூரி அதிபர் திரு. சு. தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. பண்டத்தரிப்புக் கோட்ட வர்த்தகபாட ஆலோசகர், திரு. ப. சுந்தரலிங்கம் அவர்களால் கணக்கியல் பாட ''நிதி பாச்சல் கூற்று'' என்னும் விடயம் பற்றி கருத்துரை வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் க. பொ. த.ப. உயர்தர வர்த்தக வகுப்பு மாணவர்களையும், அப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் பாடசாலை ரீதியாகப் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (41)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-22

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-ஒட்டகப்புலம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**முருகேசு** [வேலுப்பிள்ளை சிறிமுருகதாஸ்-ஒட்டகப்புலம், வசாவிளான்-யாழ்]

1987ஆம் ஆண்டு மட்டு சிறிலங்கா அதிரடிப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய, மட்டு பிரதேசத் தளபதி;

★ **பொன்னன்** [பாக்கியராசா பொன்னம்பலம்-மட்டு]

மட்டு-வாழைச்சேனை-கறுவாச்சோலைப் பகுதயில் சிறிலங்கா அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**தீசன்** [வேலு மதிவாணன்-பெரியபுல்லுமலை-மட்டு]

**இராகவன்** [சுப்பிரமணியம் தியாகராசா-கோப்பாவெளி-மட்டு]

1989 ஆம் ஆண்டு அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகள் மேற்கொண்டமுற்றுகையின்போது சயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**பாரூக்** [நாகூர்த்தம்பி பாயீஸ்ஆதாம்லெப்பை-அக்கரைப்பற்று 01-அம்பாறை]

திருமலை-தென்னமரவடி, சிறிபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பிரகாஷ்** [கணபதிப்பிள்ளை கமலநாதன்-திருமலை]

1990ஆம் ஆண்டு திருமலை-நிலாவெளிப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த;

**சிறி** (— புல்மோட்டை-திருமலை)

திருமலை-உப்புவெளி- 3-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**வேங்கை** (ஆறுமுகம் மயில்வாகனம்-அம்பாள்குளம்-கிளிநொச்சி)

**டானியல்** [கனீபா முகம்மதுராசிக்-திருமலை]

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். நாதன்** (சின்னத்தம்பி ரவீந்திரன்-கிராஞ்சி-பூநகரி)

மன்னார்-தலைமன்னார் பகுதியில் 15.06.1990 அன்று நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வரும்போது.

**சசிதரன்** [குபேந்திரன் அல்போன்ஸ் - குஞ்சுக்குளம்-மன்னார்

## பண்டிதமணி நினைவாக ஞாயிறன்று நினைவுபேருரை

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மொழி. இலக்கியம். சைவ சித்தாந்தம் என்பன பற்றிய சிறந்த நூல் ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபா விருது வழங்கப்படவுள்ளது. பண்டிதமணி அவர்களின் ஆக்கங்கள், அவர்தம் பணிகள் பற்றிய ஆய்வு நூல்களும் விருது வழங்குவதற்கான ஆய்வில் இடம் பெறும்.

இத்துடன், ஆண்டுதோறும் பண்டிதமணி பிறந்தநாளான ஜூன் 27ஆம் திகதி அறிஞர்களை வரவழைத்து நினைவுப் பேருரைகள் நிகழ்த்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

இவற்றுக்குத் தேவையான நிதியம் பண்டிதமணி அவர்களின் மாணாக்கர் ஒருவரால் மனமுவந்து உபகரிக்கப்பட்டுள்ளது. இந் நிதியத்தை நிர்வகிக்கப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுக் காப்பு நிதியம் என்ற பெயரில் அறங்காவற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நிதியத்தின் தலைவராகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி, துணைத் தலைவராக பேராசிரியர் அ. சண்முகதாஸ், செயலாளராகத் திரு சு. இராசநாயகம். பொருளாளராகத் திரு க. சொக்கலிங்கம் ஆகியோரும், அறங்காவற்குழு உறுப்பினராகச் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. திரு ஆ. பாரத்தினம். திரு. து. வைத்திலிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு பண்டிதமணி நினைவுப் பேருரை நிகழ்ச்சி ஜூன் 27ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் எனவும், யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா அவர்கள் பண்டிதமணி நினைவுப் பேருரை ஆற்றுவார் எனவும் செயலாளர் அறிவித்துள்ளார்.

தோட்ட நிர்வாகிகளால் வழங்கப்பட்ட

## அடையாள அட்டைகளை பொலிசார் ஏற்க மறுப்பு

கல்வி மேம்பாட்டு
நம்பிக்கை நிதியம்

கிளிநொச்சி
மாவட்டத்திற்கு
உயர்தர
வகுப்புகளிற்கான
விஞ்ஞான, கணித
பட்டதாரி
ஆசிரியர்களுக்கான

## பதவி
## வெற்றிடங்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் உயிரியல் விஞ்ஞான, பௌதிகவியல் விஞ்ஞான அல்லது கணிதவியல் பட்டதாரிகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 02-07-1993 வெள்ளிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

நேர்முகப்பரீட்சை 13-07-1993 செவ்வாய்க்கிழமை பி ப. 2-00 மணிக்கு விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது. தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு மேற்படி நிதியத்திலிருந்து பட்டதாரிகளுக்குரிய மாதாந்தப்படி வழங்கப்படும்.

பதிவாளர்
யாழ் பல்கலைக் கழகம்

யாழ் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்
14.06.1993.

(சி/6873)

---

# ★ A/L 94
## கணக்கியல் பகுதி I
புதிய அலகுடன் ஆரம்பமாகின்றது.
ஆரம்பம் : 24-06-93 மாலை 5.00 மணி
## ✶ 95 கணக்கியல்
## புதிய பிரிவு
ஆரம்பம் : 24-06-93 மாலை 8.00 மணி
ஆசிரியர் : திரு. V. உருத்திரசிங்கம்

விபரங்களுக்கு :
## பட்டப்படிப்புகள் கல்லூரி
57 / 48, ஸ்ரான்லி வீதி,
[இலங்கை வங்கி முன்பாக]
யாழ்ப்பாணம்.

[சி-6879]

---

வீட்டில் இருந்தபடியே உங்களுக்குத்
தேவையான பொருள்களை
பெற்றுக்கொள்ள எம்முடன்
## தொடர்பு கொள்ளுங்கள்
★ அன்றாட பாவனைப் பொருள்கள்
★ மரக்கறி வகைகள்
★ அத்தியாவசியப் பொருள்கள்
★ ஆடம்பரப் பொருள்கள்
எதுவாயினும் உங்கள் வீட்டிற்கே கொண்டு
வந்து விநியோகிப்போம்.
உடன் எம்மிடம் அங்கத்தவராகச் சேர்ந்து
பயன் பெறுங்கள்

விபரங்களுக்கு:
## C.D.S. டிஸ்றிபியூட்டோர்ஸ்
148 1, ஸ்ரான்லி வீதி,
(சி/6878) யாழ்ப்பாணம்.

---

உ
விராட் விஸ்வப் பீரம்மணே நம
## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ஸ்ரீமுக ஆண்டு ஆனித்திங்கள் 9ஆம் நாள் (23-6-93)
புதன்கிழமை பகல் 8.30 — 11.00 மணியளவில் வரும்
சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி இருநிறைச்செல்வி
## ஜலஜா அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சமுகம்தந்து எமது செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(அன்பர்கள் யாவரும் இதனை அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(சி-6872)

தங்கள் நல்வரவை நாடும்
அ. யோகராசாவும்
பாரியார் மஞ்சுளாவும்

---

சிறந்த நூல் ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபா விருது வழங்கப்படவுள்ளது. பண்டிதமணி அவர்களின் ஆக்கங்கள், அவர்தம் பணிகள் பற்றிய ஆய்வு நூல்களும விருது வழங்குவதற்கான ஆய்வில் இடம் பெறும்.

இத்துடன், ஆண்டுதோறும் பண்டிதமணி பிறந்தநாளான ஜூன் 27ஆம் திகதி அறிஞர்களை வரவழைத்து நினைவுப் பேருரைகள் நிகழ்த்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

இவற்றுக்குத் தேவையான நிதியம் பண்டிதமணி அவர்களின் மாணாக்கர் ஒருவரால் மனமுவந்து உபகரிக்கப்பட்டுள்ளது. இந் நிதியத்தை நிர்வகிக்கப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுக் காப்பு நிதியம் என்ற பெயரில் செயலாளராகத் திரு சு. இராசநாயகம். பொருளாளராகத் திரு க. சொக்கலிங்கம் ஆகியோரும், அறங்காவற் குழு உறுப்பினராகச் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு ஆ. பாரத்தினம் திரு. து. வைத்திலிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு பண்டிதமணி நினைவுப் பேருரை நிகழ்ச்சி ஜூன் 27ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் எனவும், யாழ். பல்கலைக் கழக மெய்யியல்துறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா அவர்கள் பண்டிதமணி நினைவுப் பேருரை ஆற்றுவார் எனவும் செயலாளர் அறிவித்துள்ளார்.

தோட்ட நிர்வாகிகளால் வழங்கப்பட்ட
# அடையாள அட்டைகளை பொலிசார் ஏற்க மறுப்பு

தேசிய அடையாள அட்டை இல்லாத தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகங்கள் நிர்வாகியின் அத்தாட்சிப்படுத்தலுடன் வழங்கிய அடையாள அட்டைகளை சோதனையின் போது ஏற்கமறுப்பதாக தமது காரியாலயத்தில் புகாரிடப்பட்டுள்ளதென விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது,

தேசிய அடையாள அட்டை இல்லாமையால் நிர்வாகம் வழங்கிய அடையாள அட்டையுடன் பயணம் செய்த ஒருவரை வீதிச்சோதனையின் போது அத்தாட்சிக்காக காட்டிய இந்த அடையாள அட்டையை சோதனையில் ஈடுபட்டவர்கள் ஏற்க மறுத்ததுடன் மறுமுறை தேசிய அடையாள அட்டை இன்றி வந்தால் கைது செய்வதாகவும் எச்சரித்து அனுப்பி விட்டனர். எனவே தோட்டத் தொழிலாளர்களிடம் தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக வேறு ஆவணங்களையும் ஏற்றுக்கொள்ள பாதுகாப்பு அமைச்சு முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை தோட்ட நிர்வாகங்கள் தேசிய அடையாள அட்டையைப்பெற்றுக்கொடுப்பதில் அதிக அக்கறை காட்டாமல் ஒரு தொகைப் பணத்தைப்பெற்றுக்கொண்டு அடையாள அட்டையை விநியோகிப்பதில் மட்டும் மிகவும் வேகமாகச் செயற்படுகின்றன. இதே அக்கறையை தேசிய அடையாள அட்டையை வழங்குவதில் காட்டினால் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டதாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

# அன்பளிப்பு
(பருத்தித்துறை)

பருத்தித்துறை விநாயகர் தரும நிதியம் அப்பகுதியில் உள்ள 30 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு 35,000 ரூபா பெறுமதியான சிலேற்களையும் சிலேற் பென்சில்களையும் இலவசமாக வழங்கியுள்ளது. இச்சிலேற்றுக்களையும் பென்சில்களையும் விநாயகர் தரும நிதியம் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பருத்தித் துறைக்குக் கொண்டுவந்திருந்தது. கொண்டு வரப்பட்ட இவ் 700 சிலேற்றுக்களும் பென்சில்களும விநாயகர் தருமநிதியத்தை அண்மித்துள்ள பாலர் பாடசாலை மாணவர்களுக்கு அப்பாலர் பாடசாலைகளின் நிர்வாகத்தினரின் அனுசரணையுடன் விநியோகிககப்பட்டன. (25)

---

## முக்கிய அறிவித்தல்

நாங்கள் நேரடியாக வந்து கேட்காத எப்–பொருள்களையும் எங்கள் பெயரைக் கூறிவரும் எவரிடமும் கொடுக்கவேண்டாம் எனக்கேட்டுக் கொள்கின்றோம்.

## அண்ணா தொழிலகம்
இணுவில்

(சி/6874)

---

லங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பிரகாஷ்** [கணபதிப்பிள்ளை கமலநாதன்-திருமலை]
199ஆம் ஆண்டு திருமலை-நிலாவெளிப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த:

**சிறி** (— புல்மோட்டை-திருமலை)
திருமலை-உப்புவெளி- 3-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**வேங்கை** (ஆறுமுகம் மயில்வாகனம்–அம்பாள்குளம்-கிளிநொச்சி)

**டானியல்** [கனீபா முகம்மதுராசிக்-திருமலை]
மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். நாதன்** (சின்னத்தம்பி ரவீந்திரன்-கிராஞ்சி-பூநகரி)
மன்னார்-தலைமன்னார் பகுதியில் 15.06.1990 அன்று நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வரும்போது.

**சசிதரன்** [குபேந்திரன் அல்போன்ஸ் - குஞ்சுக்குளம்-மன்னார்

அம்பாறை-காரைதீவுப்பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 35 தமிழர்கள். மற்றும் இதேபகுதியில் வெட்டிக்கொல்லப்பட்டு கிணற்றில் போடப்பட்ட 4 தமிழர்கள்.

மட்டு - நிந்தாவூர்ப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொலலப்பட்ட 23 தமிழர்கள்.

சம்மாந்துறைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 30 தமிழர்கள்.

கறுவாக்கேணிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டு - வாழைச்சேனை அகதிமுகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் உட்பட 71 தமிழர்கள்.

சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வாழைச்சேனை கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழ் மாணவன்.

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பெரியநீலாவணை 01ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

திருமலை - மூதூர் கடற்கரைச்சேனைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்.

பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட குட்டியபுலத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண்.

பலாலி வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட கொம்மாந்துறையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6871)

சிந்தனைக்கு

நிகழ்காலத்தை விலை கொடுத்துத்தான்
எதிர்காலம் வாங்கப்படுகின்றது.
- ஸேம்யல் ஜான்சன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## திரிபுபடுத்தப்பட்ட பிரசாரம்

சிங்கள அரசாங்கமும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்களும் சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் தகவல்களை முழுமையாகத் திரித்துக் கூறியே பழக்கப்பட்டு விட்டன. அப்பழக்க தோசமே போர்க்கைதிகள் தொடர்பாக புலிகள் விதித்த நிபந்தனையையும் திரிபுபடுத்த அரசாங்கம் முயற்சி செய்துள்ளது.

"போர்க் கைதிகளை விடுதலை செய்வதானால், அத்தியாவசிய பொருள்கள் மீதான தடையை நீக்கி, தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதார பளுவை அகற்றி விட அரசாங்கம் நடவடிக்கை எடுததால் கைதிகளை விடுவிக்கப் புலிகள் தயாராக உள்ளனர்" இதுவே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் ஆனந்த 'வீரசேகராவிடம் புலிகள் தெரிவித்ததாகும்.

அதுவும் விடுதலைப் புலிகள் முன்னர் கைதிகள் தொடர்பாக முன்வைத்த நிபந்தனைக்கு அரசாங்கம் செவி சாய்க்காது போனதைத் தொடர்ந்தே இப்புதிய நிபந்தனை முன்வைக்கப்பட்டது. அதாவது, கைதிகள் விடுதலை தொடர்பான நடவடிக்கையை முன்னெடுக்கும் நன்நோக்கிலேயே புலிகள் இதனை மேற்கொண்டனர் என்பதே சரியானதாகும்.

இந்நிலையில், கைதிகள் விடுதலைக்குப் புலிகள் புதிய நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர். பற்றறி, பெற்றோல் மீதான தடையை நீக்கக் கோருகின்றனர் என்றெல்லாம் கேவலமான பிரசாரங்களைச் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்வது நாகரிகமற்ற செயலாகும். இதேவேளை, கைதிகள் தொடர்பாக எதுவித நிபந்தனையும் இன்றி விடுதலைப் புலிகள் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோருவதும், எதிர்பார்ப்பதும் மடமை ஆகும்.

சிறிலங்கா அரசாங்கம் எதுவித நிபந்தனையும் இன்றி கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என எதிர்பார்த்தது போல் உள்ளது. ஆனால், இது

# குடுமிபிடி சண்டைகளின் கூட்டுக் கதம்பம்

# இதுதான் இன்றைய தி. மு. க.

தி.மு.க மீண்டும் பிளவுபடுமா? இக்கேள்வி தமிழக அரசியல் அரங்கில் மேலோங்கி இருக்கின்றது. தந்தை பெரியாரினால் ஆரம்பிக்கப்பட்ட திராவிடர் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற பேரறிஞர் அண்ணாத்துரையினாலும் அவரது சகாக்களாலும் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாத்துரையின் மறைவு வரை பிளவுகளால் பெரும் பாதிப்பு எதையும் சந்திக்கவில்லை. தந்தை பெரியார் முன்வைத்த சீர்திருத்தக் கருத்துக்களை அப்படியே எதிரொலித்த அண்ணா, திராவிடநாடு கோரிக்கையை கைவிட்டும், தேர்தல்களில் போட்டியிட முன் வந்தும் அரசியல் கொள்கை ரீதியாக பெரும் மாறுதல்களை மேற்கொண்ட போதும் அண்ணாவின் அணியிலிருந்து பிரிந்துசென்ற கண்ணதாசன், ஈ. வெ. க. சம்பத், சிவாஜி கணேசன்போன்றோரால் தமிழக அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதையும் ஏற்படுத்தமுடியவில்லை. ஆனால் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட எம். ஜி ஆர், அ. தி. மு. கவை ஆரம்பிதது தி.மு.கவை ஆட்டம காணச் செய்தார். எம். ஜி. ஆரின் மறைவுக்குப் பின்னர் அவர் உருவாக்கிய கழகம்பல துண்டுகளாக சிதறுண்டு ஜெயலலிதா அம்மையார் பிரகாசித்த போதும் தி. மு. கவிற்கும் பிரகாசமான எதிர்காலம் உண்டு என்றே பரவலாகக் கருதப்படுகின்றது.

எனினும் தி.மு.க தற்போது உட்கட்சிப் பூசல்கள் மலிந்துள்ளமையினாலும், குடும்ப ஆதிக்கப் போட்டிகளாலும், இது போன்ற இன்ன பிற காரணிகளாலும் மீண்டும் ஒரு பிளவை சந்திக்குமா என்ற கேள்வி தற்போது தமிழக அரசியல் அரங்கில் மேலோங்கியுள்ளது. தி. மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தவர்கள் அரசியல் ஈடுபாடு கொண்டிருப்பதால்ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் ஒரு புறம், கட்சித் தலைவர்களுக்கிடையேயான குத்து வெட்டுக்களால் உருவாகியுள்ள ஆபத்து மறு புறம்.

### கழகமும் குடும்பமும்

கலைஞர் கருணாநிதியின் மனைவிமார்களான தயாளு அம்மாளும், ராஜாத்தி அம்மாளும் தத்தமது குடும்ப செல்வாக்கை கழகத்தில் நிலை நிறுத்துவதில் பாடுபட்டு வருகின்றனர். இதற்காக கோஷ்டி சேர்ப்புகள் நடைபெறுகிறது. தயாளு அம்மாளின் புதல்வர் ஸ்டாலினை வாரிசாகக் கொண்டு வருவதில் முனைந்திருக்கிறார் கலைஞர். ஸ்டாலி தி.மு.க. இளைஞர் அணியின் தலைவர். கழக நிகழ்ச்சிகளில் அவருக்கு முக்கிய இடம் அவர் சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு முரசொலியில் முக்கியத்துவம். தான் செல்லும் இடங்களுக்கு எல்லாம் ஸ்டாலினை அழைத்துச் சென்று "இவர் தான் என் அரசியல் வாரிசு" என்று முத்திரை குத்துவதற்கு கலைஞர் முடிவு செய்திருப்பதாகக் கூறுகிறது தமிழக வாராந்தச் சஞ்சிகை ஒன்று.

ராஜாத்தி அம்மாளின் புதல்வி கனிமொழி படித்தவர். கவிதை எழுதும் ஆற்றலும், கட்சியின் வளர்ச்சியில் ஆர்வமும் கொண்டவர். கலைஞர் முதல்வராக இருந்த போது அவரின் பிரத்தியேக செயலாளராக இருந்தவர். "ஸ்டாலினுக்கு கட்சியில் முக்கியத்துவம் கொடுத்து கட்சியை அவரிடம் தாரைவார்க்க முடியாது கனிமொழிக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும்" என்று ராஜாத்தி அம்மாள் கலைஞரை நச்சரிப்பதாகவும் கூறப்படுகின்றது.

தயாளு அம்மாளின் மற்றொரு புதல்வரான மு. க. அழகிரியும் அரசியல் ஈடுபாடு கொண்டிருக்கின்றார் மதுரையில் இவருக்கு செல்வாக்கு உண்டு.

தயாளு அம்மாளுக்கு அவரது மகன்களான ஸ்டாலின், அழகிரி கலைஞரின் மருமகனான முரசொலி மாறன், முரசொலி ஆசிரியர் செல்வம் ஆகியோரின் ஆதரவு உண்டு.

வை. கோபாலசாமி, முன்னாள் சபாநாயகர் தமிழ்க்குடிமகன், ஆலடி அருணா போன்றோர் ராஜாத்தி அம்மாளின் பக்கம் நின்று கனிமொழிக்கு

பட்ட முன்னாள் திரைப்பட நடிகரான மு. க. முத்துவின் ஏழ்மையை ஜெயலலிதா நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளார். அண்மையில் நிகழ்த்தப்பட்ட பெரும் விழா ஒன்றில் வைத்து மு. க. முத்துவுக்கு பணமுடிப்பும், வீடொன்றும் வழங்கினார் ஜெயலலிதா கருணாநிதியை கிண்டல் பண்ணும் வகையில்.

### உயர்மட்ட தலைவர்களின் உள்ளக்குமுறல்

கலைஞர் தி மு. கவை தன் குடும்பச் சொத்தாகவே கருதிச் செயற்படுகிறார். இது கழகத்தின் உயர்மட்டத்தலைவர்கள் மற்றும் பழைய தொண்டர்களின் மத்தியில் உள்ளக்குமுறலை ஏற்படுத்தி

**இளையவன்**

யுள்ளது முன்னாள் அமைச்சர்களான அன்பழகன், நாஞ்சில் மனோகரன் போன்றோரும் கலைஞரின் போக்கால் எரிச்சல் அடைந்துள்ளனர். மற்றும் பலமுன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம். எல். ஏக்கள், மாவட்ட செயலாளர்கள் ஒதே கோணத்தில் சிந்திக்கத் தலைப்பட்டு உள்ளனர். இத்தகையவர்கள் தான் வை. கோபாலசாமியை மாற்றுத் தலைவராகக் கொண்டு வருவதில் முனைப்பாக உள்ளனர்.

வை. கோ எனப் பொதுவாக அழைக்கப்படும் வை. கோபாலசாமி முன்னாள் ராஜ்யசபா உறுப்பினர் கவர்ச்சிகரமாக ஆனால் தீப்பொறி பறக்க ஆணித்தரமாகப் பேசக்கூடியவர். தலைவருக்குப் பின் வை. கோ வுக்குத் தான் கூட்டம் அதிகம் என்று தி. மு. கவினரே ஒப்புக்கொள்கின்றனர். தென் மாவட்டங்களில் கணிசமான செல்வாக்கு உடைய வை. கோவிற்கு பத்துக்கும் மேற்பட்ட மாவட்டச் செயலாளர்களின் ஆதரவும் உண்டு.

தி. மு. க தலைமை வை. கோவை ஓரங்கட்ட முயற்சிகள் எடுத்து வருகின்றது. தி. மு.க தலைமையகமான அறிவாலயத்தில் நடைபெற்ற பேச்சாளர் மாநாட்டில் உரையாற்றிய கருணாநிதி "விடுதலைப் புலிகள் விடயத்தில் தி. மு. க ஏமாந்து போனதாகக் குறிப்பிட்டதோடு புலிகளுக்கு சார்பாக கோபாலசாமி போன்றோர் பேசுவதை நிறுத்த வேண்டும்" என்றும் குறிப்பிட்டதை இத்தகைய ஓரங்கட்டும் முயற்சியின் ஓர் அங்கம் என்றே வை. கோ. ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

கலைஞரின் மகன் அழகிரியைக் கண்டித்து சுவரொட்டி வெளியிட்டவர்களும், முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கத்தின் ஆதரவாளர்களும் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் வெளியிட்ட சுவரொட்டிகளில் 'மீண்டும் 1974 ஐ உருவாக்காதீர்' என எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது என்கின்றனர் அவதானிகள் கலைஞர் கருணாநிதி மேற்கொண்ட இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் வை. கோ. வைக் கலக்கமடையச் செய்திருக்கிறது. எனினும் ஸ்டாலின் தான் தனது வாரிசு என்று கலைஞர் உறுதிப்படுத்தும் போது புகைந்து கொண்டிருக்கும் குடும்ப மோதல்கள் உட்பூசல்கள் பூதாகரமாக நிச்சயம் வெடிக்கும். அப்போது தி.மு.க பிரமுகர்கள் பலர் கட்சியிலிருந்து வெளியேறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆக, இன்றைய தி. மு. க. என்றால் என்ன? சுருக்கமாகக் கூறின் தயாளு அம்மாளுக்கு எதிராக ராஜாத்தி அம்மாள் ஸ்டாலினுக்கு எதிராக கனிமொழி, முரசொலி மாறனுக்கு எதிராக வை. கோபாலசாமி ஒரு மாவட்ட செயலாளருக்கு எதிராக மற்றொரு மாவட்ட செயலாளர் இந்தக் குடுமி பிடிச்சண்டைகளின் கூட்டுக் கதம்பம்தான். இன்றைய தி.மு.க.

### தி. மு. கவின் வளர்பிறைக் காலம்

அண்மையில் துக்ளக் பத்திரிகை நடத்திய அரசியல் கணிப்பீடு எடுத்துக் காட்டுகின்றது. இந்தக் கணிப்பீடு தி. மு. கவின் செல்வாக்கு அதிகரித்திருப்பதையும் அ.இ. அ. தி. மு. கவின் செல்வாக்கில் பெரும் சரிவு ஏற்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது. இக்கணிப்பீட்டில் 35 சதவிகிதமானோர் தி.மு. கவை ஆதரித்துள்ளனர். 20 சதவிகிதமானோரே அ. இ. அ.தி.மு. கவிற்கு ஆதரவுகாட்டியுள்ளனர். முதல்வர் ஜெயலலிதாவின் இரண்டு வருட ஆட்சியை சுத்த மோசமானது என்று 60 சதவிகிதமானோர் கருத்து வெளியிட்டு இருக்கும் அதேவேளை இரண்டு சதவிகிதம் பேர் மட்டும் ஜெயலலிதாவின் ஆட்சியை சிறப்பானது எனக் கூறியுள்ளனர். ஊழல், சட்டம், ஒழுங்கு, வேலைவாய்ப்பு, விலைவாசி, அத்தியாசியப் பொருள்களின் தாராளப் புழக்கம் என்பன உள்ளிட்ட பல விடயங்களிலும் ஜெயலலிதாவின் ஆட்சியை விடக் கருணாநிதியே பரவாயில்லை என்று தமிழக மக்கள் நினைக்கும் அளவுக்குத்தான் ஜெயலலிதாவின் இரண்டு வருட ஆட்சி நடைபெற்றுள்ளது.

மேலும், இக்கணிப்பீட்டில் முதல்வர் பதவிக்கு பொருத்தமானவர் யார்? என்ற கேள்விக்கு பதிலளித்தோரில் 44 சதவிகிதமானோர் கருணாநிதியையும், 18 சதவிகிதமானோர் ஜெயலலிதாவையும் ஆதரித்துள்ளனர். இந்தநிலையில்தான் ஜெயலலிதாவின் பரமஎதிரி கருணாநிதி அல்ல. அவரது முன்கோபம் தான் என்றும், முன்கோபத்தைக் கட்டுப்படுத்தாது விட்டால் அடுத்த தேர்தலில் அதோகதி தான் என்றும் அ. இ அ.தி. மு. க. எம். எல்.ஏக்கள் சிலர் கருதுகின்றனர்.

ஆக மொத்தத்தில் சொல்வதனால் அ. இ. அ. தி. மு. க. தன் சொந்தப் பலவீனங்களால் செல்வாக்கை இழந்துவர, அவ் இடத்திற்கு மாற்றாக தி.மு.கவை மக்கள்கருதுவதாகத்தெரிகின்றது. ஆனால் தி.மு.கவின் பலவீனமாக குடும்ப ஆதிக்கப் போட்டியும், உட் கட்சிப்பூசலும் காணப்

அரசாங்கம் செவி சாய்க்காது போனதைத் தொடர்ந்தே இப்புதிய நிபந்தனை முன்வைக்கப் பட்டது. அதாவது, கைதிகள் விடுதலை தொடர்பான நடவடிக்கையை முன்னெடுக்கும் நன்நோக்கிலேயே புலிகள் இதனை மேற்கொண்டனர் என்பதே சரியானதாகும்.

இந்நிலையில், கைதிகள் விடுதலைக்குப் புலிகள் புதிய நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர். பற்றறி, பெற்றோல் மீதான தடையை நீக்கக் கோருகின்றனர் என்றெல்லாம் கேவலமான பிரசாரங்களைச் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்வது நாகரிகமற்ற செயலாகும். இதேவேளை, கைதிகள் தொடர்பாக எதுவித நிபந்தனையும் இன்றி விடுதலைப் புலிகள் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோருவதும், எதிர்பார்ப்பதும் மடமை ஆகும்.

சிறிலங்கா அரசாங்கம் எதுவித நிபந்தனையும் இன்றி கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என எதிர்பார்த்தது போல் உள்ளது. ஆனால், இது நியாயபூர்வமற்ற எதிர்பார்ப்பு ஆகும். ஏனெனில் அவர்கள் அப்பாவிச் சிங்கள் மக்கள் அல்ல. தமிழருக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடிய யுத்தக் கைதிகள். சிறிலங்கா அரசாங்கத்தின் இராணுவ அடக்குமுறை இயந்திரத்தின் ஒரு பகுதியினர்.

இந்நிலையில், கைதிகள் விவகாரம் தொடர்பாக எந்தவித முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுக்காமல் புலிகள் புதிய நிபந்தனை விதித்துள்ளார்கள். புலிகள் ஏமாற்றி விட்டார்கள் என கூறுவதெல்லாம் தவறாகும். உண்மையில் கைதிகள் விவகாரத்தில் அரசாங்கம் அக்கறையாக இருந்திருக்குமானால், பிரிகேடியர் வீரசேகரா யாழ்ப்பாணம் வந்தபொழுதே அரசாங்கத்தின்முன்னேற்றகரமான திட்டங்கள் எதையும் எடுத்துவந்திருப்பார். ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

ஆனால், விடுதலைப் புலிகள் கைதிகள் விடுதலைக்கு மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்து முன்னேற்றகரமான முயற்சிகளை மேற்கொண்டால், புலிகள் புதிய நிபந்தனை விதிக்கின்றார்கள், ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனையை விதிக்கின்றார்கள் என அரச கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்களும், பேரினவாதப் பத்திரிகைகளும் ஒப்பாரி வைக்கின்றன.

ஆனால், இம் மக்கள் தொடர்புச் சாதனங்களோ அன்றி பேரினவாதப் பத்திரிகைகளோ கைதிகள் உண்ணாவிரதம் இருந்ததைப் பற்றி ஆரம்பத்தில் எதையும் கண்டு கொள்ளவில்லை. தற்பொழுது நெருக்கடி சற்று அதிகரித்துள்ள நிலையில் புலிகள் மீது பாரத்தைப் போட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றன. அதாவது, கைதிகளின் விடுதலைக்காக அரசாங்கத்தைத் தூண்ட வேண்டிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் புலிகளைக் குறை கூறுவதுடன் தம்மையும், அரசாங்கத்தையும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஆனால், இவை நன்மை பயக்கக் கூடிய ஏற்பாடுகள் அல்ல. சில விபரீதமான விளைவுகள் ஏற்படுவதற்கும் வாய்ப்புக்களே உண்டு. இந்நிலையில் அரசாங்கம் போலித்தனமான பிரசாரங்களை கைவிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபடுதலே விரும்பத்தக்கது.

உருவாக்கிய கழகம்பல துண்டுகளாக சிதறுண்டு ஜெயலலிதா அம்மையார் பிரகாசித்த போதும் தி. மு. கவிற்கும் பிரகாசமான எதிர்காலம் உண்டு என்றே பரவலாகக் கருதப்படுகின்றது.

எனினும் தி.மு.க தற்போது உட்கட்சிப் பூசல்கள் மலிந்துள்ளமையினாலும், குடும்ப ஆதிக்கப் போட்டிகளாலும், இது போன்ற இன்ன பிற காரணிகளாலும் மீண்டும் ஒரு பிளவை சந்திக்குமா என்ற கேள்வி தற்போது தமிழக அரசியல் அரங்கில் மேலோங்கியுள்ளது. தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தவர்கள் அரசியல் ஈடுபாடு கொண்டிருப்பதால்ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் ஒரு புறம், கட்சித் தலைவர்களுக்கிடையேயான குத்துவெட்டுக்களால் உருவாகியுள்ள ஆபத்து மறுபுறம். ஆக 1974இல் கழகம் சந்தித்ததைவிட பெரும் நெருக்கடியில் இப்போது தி. மு. கவும் அதன் தலைமையும் சிக்கியுள்ளது.

ரிடம் தாரைவார்க்க முடியாது கனிமொழிக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும்'' என்று ராஜாத்தி அம்மாள் கலைஞரை நச்சரிப்பதாகவும் கூறப்படுகின்றது.

தயாளு அம்மாளின் மற்றொரு புதல்வரான மு. க. அழகிரியும் அரசியல் ஈடுபாடு கொண்டிருக்கின்றார் மதுரையில் இவருக்கு செல்வாக்கு உண்டு.

தயாளு அம்மாளுக்கு அவரது மகன்களான ஸ்டாலின், அழகிரி கலைஞரின் மருமகனான முரசொலி மாறன், முரசொலி ஆசிரியர் செல்வம் ஆகியோரின் ஆதரவு உண்டு.

வை. கோபாலசாமி, முன்னாள் சபாநாயகர் தமிழ்க்குடிமகன், ஆலடி அருணா போன்றோர் ராஜாத்தி அம்மாளின் பக்கம் நின்று கனிமொழிக்கு ஆதரவு தேடுவோரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதேவேளை கருணாநிதி குடும்பத்திலிருந்து ஒதுக்கப்

...ள், மாவட்ட செயலாளர்கள் ஒரே கோணத்தில் சிந்திக்கத் தலைப்பட்டு உள்ளனர். இத்தகையவர்கள் தான் வை. கோபாலசாமியை மாற்றுத் தலைவராகக் கொண்டு வருவதில் முனைப்பாக உள்ளனர்.

வை. கோ எனப் பொதுவாக அழைக்கப்படும் வை. கோபாலசாமி முன்னாள் ராஜ்யசபா உறுப்பினர் கவர்ச்சிகரமாக ஆனால் தீப்பொறி பறக்க ஆணித்தரமாகப் பேசக்கூடியவர். தலைவருக்குப் பின் வை. கோ வுக்குத் தான் கூட்டம் அதிகம் என்று தி. மு. கவினரே ஒப்புக்கொள்கின்றனர். தென் மாவட்டங்களில் கணிசமான செல்வாக்கு உடைய வை. கோவிற்கு பத்துக்கும் மேற்பட்ட மாவட்டச் செயலாளர்களின் ஆதரவும் உண்டு.

எனினும் ஸ்டாலின் எதிர்காலத் தலைவராக மிளிர்வதற்கு வை. கோ. தடையாக விளங்கலாம் என்று கருதும்

...டிருக்கும் குடும்ப மோதல்கள் உட்பூசல்கள் பூதாகரமாக நிச்சயம் வெடிக்கும். அப்போது தி.மு.க பிரமுகர்கள் பலர் கட்சியிலிருந்து வெளியேறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆக, இன்றைய தி. மு. க. என்றால் என்ன? சுருக்கமாகக் கூறின் தயாளு அம்மாளுக்கு எதிராக ராஜாத்தி அம்மாள் ஸ்டாலினுக்கு எதிராக கனிமொழி, முரசொலி மாறனுக்கு எதிராக வை. கோபாலசாமி ஒரு மாவட்ட செயலாளருக்கு எதிராக மற்றொரு மாவட்ட செயலாளர் இந்தக் குடுமி பிடிச்சண்டைகளின் கூட்டுக் கதம்பம்தான். இன்றைய தி.மு.க.

### தி. மு. கவின் வளர்பிறைக் காலம்

இத்தகைய நிலையிலும் கூட தி. மு. க. பலம் வாய்ந்த ஒரு கட்சியாகவே இருப்பதை

...விக்கு பதிலளித்தோரில் 44 சதவிகிதமானோர் கருணாநிதியையும், 18 சதவிகிதமானோர் ஜெயலலிதாவையும் ஆதரித்துள்ளனர். இந்தநிலையில்தான் ஜெயலலிதாவின் பரமஎதிரி கருணாநிதி அல்ல. அவரது முன்கோபம் தான் என்றும், முன்கோபத்தைக் கட்டுப்படுத்தாது விட்டால் அடுத்த தேர்தலில் அதோகதி தான் என்றும் அ. இ அ.தி. மு. க. எம். எல்.ஏக்கள் சிலர் கருதுகின்றனர்.

ஆக மொத்தத்தில் சொல்வதனால் அ. இ. அ. தி. மு. க. தன் சொந்தப் பலவீனங்களால் செல்வாக்கை இழந்து வர, அவ் இடத்திற்கு மாற்றாக தி.மு.கவை மக்கள்கருதுவதாகத்தெரிகின்றது.ஆனால் தி.மு.கவின் பலவீனமாக குடும்ப ஆதிக்கப் போட்டியும், உட் கட்சிப்பூசலும் காணப்படுகின்றது. இந் நிலையில் தமிழகத்தின் அரசியல் எதிர்காலம் குழப்பம் மலிந்ததாக மாறும் என்பதை மட்டும் அறுதியிட்டுச் சொல்லலாம்.

# மனித உரிமை மீறப்பட்டால் சர்வதேசதலையீடுஅவசியம்

**- ஐ.நா. செயலாளர்**

'அரசுகள் தான் மனித உரிமைகளின் சிறந்த உத்தரவாதியாக இருக்க வேண்டும். இந்தப் பணியை செவ்வனே செய்ய லாயக்கற்றவையாக அரசுகள் இருக்கும் போது சர்வதேச நடவடிக்கை என்ற விவகாரம் கிளப்பப்படவேண்டும்.' என்று ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயகம் பூட்டர்ஸ் பூட்டர்ஸ்காலி தெரிவித்தார்.

வியன்னாவில் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. உலக மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் மேலும் கூறுகையில்;எதேச்சாதிகார அரசுகளினால் பயன்படுத்தப்படும் 'உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை' என்ற மூடு திரைப்பதத்தை நிராகரித்ததுடன் உலகளாவிய ஜனநாயகத்துக்கான அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அரசுகள் மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கின்ற நிலையிலிருந்து மக்களைக் கொடுமைப்படுத்துபவையாக மாறும்போது சர்வதேச நடவடிக்கை என்ற பிரச்சினை எழும்பத்தான் செய்யும். இது எதுவிதத்திலும் சமகால சுயாதிபத்தியத்தை பாதிக்கப்போவதில்லை என்று குறிப்பிட்ட செயலாளர்நாயகம் மனித உரிமைகளை மீறும் நாடுகள் தொடர்ந்தும் இச் செயல்களில் ஈடுபடாதிருப்பதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றி விளக்கவில்லை.

அடிப்படை மனித உரிமைகள் தேசிய எல்லைகளுக்கு அப்பால்வியாபிப்பவை. மனித குலம் முழுவதினதும் மதிப்புமிக்க பொது அம்சமே மனித உரிமைகள் என்று தெரிவித்ததுடன், மனித உரிமைகளை, மீறும் நாடுகளைக் கண்டிப்பதற்காக புதிய கருவிக்கு உதாரணமாக முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கென நியமிக்கப்பட்ட யோர்க்குற்ற விசாரணை மன்றை எடுத்துக் காட்டினார்.

இந்த மகாநாட்டிலே 100க்கும் அதிகமான நாடுகள் பங்குபற்றுகின்றன. கடந்த 25 வருடங்களில் மனித உரிமைகள் தொடர்பாக கூட்டப்பட்ட சர்வதேச மகாநாடுகளில் இதுவே மிகப் பெரியது.

## வீரப்பன் குழுவைச் சேர்ந்த மேலும் 13பேர் கைது

(சென்னை)

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் குழுவைச் சேர்ந்த மேலும் பதின்மூன்று பேர் கர்நாடக சிறப்பு அதிரடிப்படைப் பொலிசாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கர்நாடக தமிழ்நாடு எல்லையோரத்திலுள்ள மலைக்காட்டுப் பகுதிகளில் வீரப்பன் குழுவினரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த கர்நாடக சிறப்பு அதிரடிப்படைப் பொலிசார், இவர்களைக் கைது செய்தனர் எனவும், இவர்களிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன எனவும், இவர்களில் அறுவர் கர்நாடக பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஆறு பொலிசாரின் கொலைக்கு காரணமானவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமையன்று தமிழ்நாடு மாநில சிறப்பு அதிரடி பொலிசாரால் இக்குழுவைச் சேர்ந்த பதின்மூன்று பேர் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

வார்த்தைப் பிரயோகம் தொடர்பாக

## பாக். தூதுவரகத்திற்கு புதுடில்லி அரசு எச்சரிக்கை

[டில்லி]

இந்தியத் தலைவர்களை தனிப்பட்ட முறையில் பெயரி குறிப்பிட்டு தாக்கிப் பேசுவதற்கு எதிராகவும், தகாத மற்றும் மிகக் கடும் வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதற்கு எதிராகவும் புதுடில்லிஅரசு பாகிஸ்தான் தூதுவரகத்திடம் எச்சரிக்கை செய்துள்ளது.

இந்த வகையான சொற்பிரயோகத்தை பயன்படுத்துவதோ அல்லது தாக்கிப் பேசுவதோ மீண்டும் ஒரு முறை இடம்பெற்றால் மிகவும் ஆட்சேபகரமானதாகவே கருதப்படும் என்றும் புதுடில்லி அரசு கூறியுள்ளது.

## போலித்திருமணங்கள் தடுக்க பிரான்சில் புதியசட்டம் வரும்

(பாரிஸ்)

குடியுரிமை பெறுவதற்காக பிரஞ்சுப் பிரசைகளை திருமணம் செய்யும் வெளிநாட்டுக் குடியேற்றக்காரர்களை தடுக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை பிரஞ்சுப் பாராளுமன்றம் நிறைவேற்றவுள்ளது.

பிரஞ்சு பாராளுமன்றத்தில் தற்போது விவாதிக்கப்பட்டு வரும் இந்தச் சட்ட விதியின் படி மணமக்களின் நோக்கம் குறித்து சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் மேயர் ஒருவர் திருமணத்தை ஒத்திவைத்து விசாரணைக்கு உத்தரவிடும் அதிகாரத்தை பெறவுள்ளார். அத்துடன் திருமணம் நடைபெற்றாலும் கூட திருமணத்தில் சம்பந்தப்படும் வெளிநாட்டு மணமகனோ, மணமகளோ எழுந்தமானமாகப் பிரெஞ்சுக் குடியுரிமையை பெற்று விட முடியாது.

இவ்வாறான திருமணங்கள் மூலம் பிரெஞ்சுக் குடியுரிமையைப்பெற விழைந்த இருபது மொராக்கோ நாட்டவர்கள் 15,000 முதல் 30,000 வரையிலான பிறாங்குகள் வரை தரகர்களுக்கு செலுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய போலித் திருமணங்கள் பற்றிய புகார்கள் 1990-ம் ஆண்டில் 280-ம் 91-ம் 92-ம் ஆண்டுகளில் தலா 200-ம் பொலிஸ் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த ஆண்டில் முதல் ஐந்து மாதத்தில் மட்டும் 80 புகார்கள் கிடைத்திருப்பதாகவும் பிரெஞ்சுப் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

# வாழைச்சேனை பகுதியில் 500 படையினர் தேடுதல்

## 2000பேர் முகமூடிகள் முன் நிறுத்தம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையை அண்டியுள்ள பல கிராமங்கள் சில தினங்களுக்கு முன்னர் அதிகாலையில் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. தேடுதலின்போது முகமூடி அணிந்த 4 பெண்கள் உட்பட 25 பேர் படையினரால் கூட்டி வரப்பட்டிருந்தனர்.

தேடுதலின்போது ஏழுபேர் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர். பேத்தாளை, கண்ணன் கிராமம், கண்ணகிபுரம், பண்டிமடு கல்மடு, கல்குடா, பட்டியச்சேனை, பாசிக்குடா, கருஞ்சேரி போன்ற கிராமங்கள் அதிகாலை 3 மணிக்கு படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. 12 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகம் கட்டடத்திற்கு அழைத்து வரப்பட்டு முகமூடிகள் முன்நிறுத்தப்பட்டனர்.

பாசிக்குடா, கல்குடா போன்ற கிராமங்களிலுள்ள மீனவர்களும் தொழிலுக்கு செல்லும் வழியில் கைதுசெய்யப்பட்டு வலை, அத்தாங்கு, விளக்கு, மற்றும் மீன்பிடி உபகரணங்களுடன் அடையாளம் காணப்படுவதற்காக முகமூடிகள் முன் நிறுத்தப்பட்டனர். தேடுதல் பிற்பகல் 2 மணிவரை நீடித்தது. சுமார் 2000பேர் படையினரால் முகமூடிகள் முன் அழைத்து வரப்பட்டதாக தெரியவருகிறது. 500இற்கும் மேற்பட்ட படையினர் தேடுதலில் பங்குபற்றினர்.

## சிறிலங்கா - இந்திய பிரதமர்கள் இன்று சந்திப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுக் காலை இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி வந்து சேர்ந்தார். இவர் நேற்று இந்திய நிதியமைச்சர் மன்மோகன்சிங், வெளியுறவு இணையமைச்சர் ஆர். எல். பாட்டியா, விஞ்ஞான தொழில்துறை இணையமைச்சர் குமாரமங்கலம் ஆகியோரை சந்தித்தா .

இன்று பிரதமர் ரணில் இந்தியப்பிரதமர் நரசிம்மராவுடன் விரிவான பேச்சுகளை நடத்துவார்.

## ஜனாதிபதி விஜயதுங்கா உருகம்பொல சந்திப்பு

(கொழும்பு)

சென்னையில் தலைமறைவாக இருந்துவிட்டு கொழும்பு திரும்பிய முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல சனியன்று ஜனாதிபதி விஜயதுங்காவை சந்தித்து பேச்சு நடத்தினார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சனியன்று காலை இடம்பெற்ற இந்த பேச்சுகள் நான்கு மணிநேரம் நீடித்தது. காலை 5 மணிமுதல் 9 மணிவரை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்பின்னர் உடுகம்பொல கண்டி தலதா மாளிகைக்குச் சென்றார். கண்டியில் அவர் அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளையும் சந்தித்தார்.

## கூட்டம்

6ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டத்தின் கோப்பாய் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீர வணக்க கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு நீர்வேலி கந்த சுவாமி கோவிலடியில் நடைபெறும்.

விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் நினைவுரைகளைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இங்கு இடம் பெறவுள்ளன. [90]

# வடக்கு-கிழக்கு இணைப்பு தமிழ் மக்கள் வற்புறுத்து

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பே கிழக்கு மாகாண மக்களுக்கு விமோசனம் அளிக்கும் என்பதைமட்டக்களப்பு மாவட்ட மக்கள் நன்குணர்ந்துள்ளனர். இணைப்பைத் தவிர வேறு எந்த வழியும் தமிழரின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய மாட்டாது என மட்டக்களப்பு சமாதானக் குழுவினர் மட்டு நகர் சென்ற சர்வதேச சமாதானக் குழுவிடம் எடுத்துக் கூறினர். மட்டக்களப்பு கத்தோலிக்க கழக மண்டபத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

வடக்குகிழக்குமக்களிடையே ணங்களின் இணைப்பே தமக்கு நன்மையாக இருக்கும் என இரு மாகாண மக்களும் உணர்ந்துள்ளனர் என மட்டக்களப்பு சமாதானக் குழுத் தலைவர் அன்ரன் மார்ட்டின் சர்வதேச சமாதானக் குழுவிடம் எடுத்துக் கூறினார்.

சர்வதேச சமாதானக் குழுவினர் தாம் வடபகுதியில் விஜயம் செய்தபோது கண்டது, அறிந்தது குறித்து இச்சந்திப்பின் போது விபரித்தனர். அன்றுமாலை அவர்கள் முஸ்லிம் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசினர்.

## உடுகம்பொல நீதிமன்றத்தில் ஆஜர்

முன்னாள் டி. ஐ ஜி உடுகம்பொல நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜரானார். அவர் இரண்டு இலட்சம் ரூபா ரொக்கமாக வைப்பு செய்ய வேண்டும் எனவும், தமது கடவுச் சீட்டை திருப்பிக் கொடுத்து விட்டு மாதம் ஒரு

## இடம்பெயர்வு

உரும்பராய் இந்துக்கல்லூரியில் இயங்கிவரும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இடநெருக்கடி காரணமாக அப்பாட சாலையின் எதிரிலுள்ள வளவுக்கு இடம்பெயரவுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பத்து வகுப்புகள் அங்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டில்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் ஆரம்ப நிகழ்வில் தமிழ் ஈழக் கலவித்துறைப் பொறுப்பாளர் திரு வே. இளங்குமரன் மருதனார்மடம் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

## க. பொ. த (சா/ தர ) பரீட்சை

## விண்ணப்ப முடிவு திகதி யூலை மாதம் 15 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

1993ஆம் ஆண்டிற்குரிய கல்விப்பொதுத்தராதர (சா / தர ) பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி அடுதத மாதம் 15ஆம் திகதி என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது

மேற்படி பரீட்சைக்கு இரண்டாம் தரம் பாடசாலையில் இருந்து விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் கட்டணம் எதுவும் செலுத்தத்தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு 15 ரூபாவும், இரண்டு பாடங்களிற்கு 20 ரூபாவும், மூன்று பாடங்களுக்கு 25 ரூபாவும், நான்கு பாடங்களிற்கு 30 ரூபாவும், ஐந்துபாடங்களிற்கு 40 ரூபாவும் ஆறு முதல் எட்டுப் பாடங்களவரை 50 ரூபாவும்விண்ணப்பக் கட்டணங்களாக செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## வீரச்சாவு



2 -ம் லெப். விஜித்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ம்-லெப். விஜித் (சாமித்தம்பி புண்ணிய

## கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு

# பத்திரிகைகள் தவறாக புரிந்து கொண்டனவாம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பாக கிழக்கில் சர்வசனவாக்கெடுப்பை விரைவில் நடாத்துவதற்கான தீர்மானம் எதையும் பாராளுமன்றத் தெரிவுக்குழு எடுக்கவில்லை என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியான செய்திகள் தவறானவையாகும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தெரிவுக்குழுவில் நானும் அங்கம் வகிக்கின்றேன். கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த சாத்தியம் உண்டா இல்லையா என அறிந்து கொள்வது குறித்தே தெரிவுக்குழு ஆராய்ந்தது. ஆனால் பத்திரிகைகள் தவறாக அதைப்புரிந்து கொண்டிருக்கின்றன என தினேஷ் குணவர்த்தனா மேலும் தெரிவித்தார்.

## ஜனசவிய தொடர அரசு அனுமதி

சிறிலங்கா அரசினால் யாழ். மாவட்டத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டதும், ஆரம்பிக்கப்பட்டதுமான ஜனசவியச் செயற்திட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவலை கொழும்பில் இருந்து யாழ் அரச அதிபர் கர மாணிக்கவாசகர் நேற்று யாழ் செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

மேலும் மேற்படி திட்டத்திற்கு நிதிவழங்கலுடன் சம்பந்தப்பட்ட வங்கிகளிற்கு இது தொடர்பாக கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது. (பா)

## சுன்னாகம் இளைஞர் கனடாவில் குத்தி கொலை

(ரொறன்ரோ)

கனடாவில் ரொறன்ரோ நகரில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் கனேடியரால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் சுன்னாகத்தை சேர்ந்த குணாளன் முத்துலிங்கம் என்பவர் எனத் தெரியவருகிறது.

கனேடிய பிரஜையுடன் மேற்படி இளைஞர் வாக்குவாதப்பட்டபோது கனேடியர் உடைந்த போத்தல் ஒன்றினால் அவரை குத்திக்கொன்றார். கொலை செய்த கனேடியர் ரொறன்ரோ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். போத்தலினால் குத்தப்பட்ட இளைஞர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இரண்டு தினங்களுக்குப் பின் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது

## பிரிகேடியரின் விமானத்தில் 2 சிப்பாய்களின் சடலங்கள்

[யாழ்ப்பாணம்]

சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக்கைதிகளை மீட்பதற்காக முதல் முறை யாழ்ப்பாணம் வந்து சென்ற பிரிகேடியர் வீரசேகர கொழும்பு திரும்பும் போது அவர் சென்ற விமானத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்களது உடல்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

கடந்த சனிக்கிழமை ஆனையிறவு இராணுவ முகாம் காவல் அரண் மீது விடுதலைப் புலிகள் நடாத்தியதாக்குதலில் கொல்லப்பட்ட இருஇராணுவ சிப்பாய்களது உடல்களே இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டன. (க)

### அவசர

டில் கலந்து கொண்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் அரச அதிகாரிகளுடன் பிரிகேடியர் வீரசேகர அவசரப் பேச்சுகளை நடத்தியதாகவும் விடுதலைப்புலிகளுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்த விபரங்களை அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெளியீடு

வணிக முகாமைத்துவ மாணவ மன்றத்தின் விருட்சம் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய் பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

### பொருளாதார

இதைத்தொடர்ந்து பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டது. தடை செய்யப்பட்ட பொருள்கள் பலவற்றை வடபகுதிக்குள் அனுமதிக்க அரசாங்கம் இணங்கிய வேளை, போர்க் கைதிகளை விடுதலை செய்ய விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்தனர்.

## பிரிகேடியர் தங்கியிருப்பார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவின் ஆணை பெற்ற தூதராக நேற்று நண்பகல் யாழ். வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகர இன்னும் சில தினங்கள் இங்கு தங்கியிருப்பார் என தெரியவருகிறது.

## அரிச்சந்திர மயானகாண்டம்

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வசந்தகான சபாவைச் சேர்ந்த இளம் நடிகைகளின் ''அரிச்சந்திர மயான காண்டம்'' என்னும் சரித்திர நாடகம் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் 7ஆம் திருவிழாவான இன்றுஇரவு நடைபெறவுள்ளது.

# தமிழ் மக்கள் வற்புறுத்து

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பே கிழக்கு மாகாண மக்களுக்கு விமோசனம் அளிக்கும் என்பதைமட்டக்களப்பு மாவட்ட மக்கள் நன்குணர்ந்துள்ளனர். இணைப்பைத் தவிர வேறு எந்த வழியும் தமிழரின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய மாட்டாது என மட்டக்களப்பு சமாதானக் குழுவினர் மட்டு நகர் சென்ற சர்வதேச சமாதானக் குழுவிடம் எடுத்துக் கூறினர். மட்டக்களப்பு கத்தோலிக்க கழக மண்டபத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

வடக்குகிழக்குமக்களிடையே கடந்த கால அனுபவங்கள் அவர்களது மனநிலைகளில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தி விட்டது. இரு மாகாணங்களின் இணைப்பே தமக்கு நன்மையாக இருக்கும் என இரு மாகாண மக்களும் உணர்ந்துள்ளனர் என மட்டக்களப்பு சமாதானக் குழுத் தலைவர் அன்ரன் மார்ட்டின் சர்வதேச சமாதானக் குழுவிடம் எடுத்துக் கூறினார்.

சர்வதேச சமாதானக் குழுவினர் தாம் வடபகுதியில் விஜயம் செய்தபோது கண்டது, அறிந்தது குறித்து இச்சந்திப்பின் போது விபரித்தனர். அன்றுமாலை அவர்கள் முஸ்லிம் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசினர்.

## உடுகம்பொல நீதிமன்றத்தில் ஆஜர்

முன்னாள் டி. ஐ ஜி உடுகம்பொல நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜரானார். அவர் இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். ஜூலை மாதம் 5ஆம் திகதிக்கு முன் அவர் 10 ஆயிரம் ரூபாவை ரொக்கமாக வைப்பு செய்ய வேண்டும் எனவும், தமது கடவுச் சீட்டை திருப்பிக் கொடுத்து விட்டு மாதம் ஒரு தடவை பொலிசில் சமுகமளிக்க வேண்டும் எனவும் அவருக்கு கட்டளையிடப்பட்டது.

உடுகம்பொலவிற்குஎதிரான வழக்கு ஆகஸ்ட்மாதம் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் இதனிடையே பிணையில் விடுவிக்கப்பட்ட உடுகம்பொலவிற்குபாதுகாப்பு வழங்க அரசு இணங்கியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. அவருக்கு ஓய்வூதியம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படடுள்ளதாம்.



2-ம் லெப். விஜித்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ம்-லெப். விஜித் (சாமித்தம்பி புண்ணியமூர்த்தி - சந்திவெளி மொறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு) எனும் போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சென்ற பிரிகேடியர் வீரசேகர கொழும்பு திரும்பும் போது அவர் சென்ற விமானத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்களது உடல்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

கடந்த சனிக்கிழமை ஆனை

### அவசர

டில் கலந்து கொண்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் அரச அதிகாரிகளுடன் பிரிகேடியர் வீரசேகர அவசரப் பேச்சுகளை நடத்தியதாகவும் விடுதலைப் புலிகளுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்த விபரங்களை அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சு நடத்த சென்றுள்ள பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவிடம் புலிகளின் நிபந்தனை தொடர்பாக தகுந்த பதில் ஒன்றை கொடுத்துவிட்டதாக பாதுகாப்பு செயலர் வோல்டர் பெர்னான்டோ நேற்று தெரிவித்தார். எனினும் பாதுகாப்பு படையினர் தரப்பில் புலிகளிடம் வழங்கப்பட்ட பதில் என்ன என்பதைக் கூற மறுத்து விட்டார்.

### சாகும்வரை

வழி கோலியதுடன் தமிழ் மக்கள் மீது அரசுவிதித்த பொருளாதாரத்தடை நீக்கப்படுவதன் மூலம் தமிழ் மக்கள் சுமந்த பளு குறைவதற்குரிய சூழ்நிலையும் உரு ாகியுள்ளது. இச்சூழ்நிலையானது சமாதான முயற்சிக்கு முன்னோடியாக அமையக் கூடியதொன்று என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

பிரிகேடியர் வீரசேகரா உரைநிகழ்த்தும்போது கைதிகளின் விடுதலைக்காக அரசு எடுத்த முயற்சிகள் குறித்தும் விடுதலைப்புலிகளுடன் தான் நடாத்திய பேச்சு வார்த்தைகள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

யாழ் அரச அதிபர் திரு. காமாணிக்கவாசகர் உரைநிகழ்த்தும்போது கடந்த காலஅரசியல் தலைவர்கள்மேற்கொண்ட தவறுகள் காரணமாகவே இன்று நாம் துன்ப துயரங்களையும் பல்வேறு அழிவுகளையும் சந்திக்கவேண்டியுள்ளது என்று தெரிவித்தார்.

### அவசரமாக

வடமராட்சி செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் நேற்றுக் காலை திடீரென யாழ் நோக்கிப் புறப்பட்ட இவர்கள் 'நரோமா' கப்பல் மூலம் பகல் 1.15மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர். யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி இவர்களை யாழ் கூட்டிச் சென்றார். இவர்களுக்கு விடுதலைப் புலிகளின் விசேட அதிரடிப் பிரிவினரின் பாதுகாப்பும் வழங்கப்பட்டது.

இதே சமபம் யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு. மற்றும் திரு. தயாநிதி ஆகியோரும் துறைமுகத்தில் காணப்பட்டனர். (யோ

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டன. (க)

### வெளியீடு

வணிகமுகாமைத்துவ மாணவ மன்றத்தின் விருட்சம் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய் பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

### பொருளாதார

இதைத்தொடர்ந்து பேச்சு வார்த்தையில் இணக்கம் காணப்பட்டது. தடை செய்யப்பட்ட பொருள்கள் பலவற்றை வடபகுதிக்குள் அனுமதிக்க அரசாங்கம் இணங்கிய வேளை, போர்க் கைதிகளை விடுதலை செய்ய விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்தனர்.

### தங்கியிருப்பார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜபதுங்காவின் ஆணை பெற்ற தூதராக நேற்று நண்பகல் யாழ். வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகர இன்னும் சில தினங்கள் இங்கு தங்கியிருப்பார் என தெரியவருகிறது.

## அரிச்சந்திர மயானகாண்டம்

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வசந்தகான சபாவைச் சேர்ந்த இளம் நடிகைகளின் ''அரிச்சந்திர மயான காண்டம்'' என்னும் சரித்திர நாடகம் வட்டுகக்காட்டை வீரபத்திர சிவன் கோவில் 7ஆம் திருவிழாவான இன்றுஇரவு நடைபெறவுள்ளது.

## தவறிவிட்டது

20-06-93 அன்று இரவு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது கிளாலியில் நாவாந்துறையைச் சேர்ந்த எட்வேட் அரியராணியின் பொதி ஒன்று தவறி விட்டது. அதில் உள்ள பொருள்கள்:

கொப்பிகள், பழங்கள், கோலோன், படவிளக்குக்கான திரிகள், மணிக்கூடு, 2 போட்டோ, கடிதங்கள், கண்ணாடி போன்ற பல பெறுமதியான பொருள்கள் இரு பயணிகள் பாக்கில் வைத்து ஒரு உரப்பையினுள் வைத்திருந்தோம். இந்த பொதியைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன். (5192)

## தேவை
## மருந்து விற்பனையாளர்

தகைமைகள்:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியும் ஏனைய பாடங்களில் சாதாரண சித்தியுடன்,

1. மருந்தாளர் கற்கைநெறியொன்றைப் பூர்த்தி செய்தவர்கள்

அல்லது

2. மருந்துக் கலவையாளர்கள்

அல்லது

3. மருந்து விற்பனை நிலையமொன்றில் விற்பனையாளராக 8 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றவர்கள்.

வயதெல்லை:- 40 வயதிற்குட்பட்டோர்
விண்ணப்ப முடிவுத் திகதி:- 26-06-1993
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

விளம்பர இல. 1[illegible]1
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(5191)

### 10 ஆயிரம்

சமர்ப்பிப்பது பற்றி ஆராயுமுகமாக கல்வி உயர் கல்வி அமைச்சருடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபை செயலாளர் ஏ எஸ். வீரரத்ன தொடர்பு கொண்டுள்ளார்.

இதேவேளையில் புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின் கடந்த மாதம் 10 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட குறுகிய கால வேலைத் திட்டத்தின் கீழ் தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்குவதற்காக பேலும் ஐயாயிரம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்விச் சேவை சபையின் செயலாளர் ஏ. எஸ். வீரரத்ன இத் தமிழ் மொழி மூல ஆசிரியர் தெரிவு பற்றி விளக்குகையில் இவ் ஆசிரியர்கள் நியமனமாகும் பேது ஆரம்ப விஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை வசிப்பிட பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையிலேயே நடைபெறும். எனவே குறித்த பிரிவின் நிரந்தர வசிப்பிட விபரத்தை உறுதிப்படுத்துவது நியமனம் பெறுவதற்கான கட்டாய தகுதியாக இருக்கும்.

தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை விரைவாகத் தீர்க்கப்படும். நியமனங்களின்போது பற்றாக்குறை உள்ள இடங்களைச் சேர்ந்தவர்களுக்கே பெரும்பாலும் இடமளிக்கப்படும்.

### தடை நீக்கப்பட்ட

தேவையான துவிச்சக்கரவண்டிகள் கொண்டுசெல்லப்பட கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதிக்கிறது.

4. தீப்பெட்டி:- வடக்கிற்கு தீப்பெட்டிகள் எடுத்துச் செல்லப்படுவதை கூட்டுப்படைத் தலைமையகம் கட்டுப்படுத்தாது

5. உரம்:- அரச அதிபரால் சிபார்சு செய்யப்படும் தேவைப்படுமளவு உரங்கள் பொருத்தமான அதிகாரிகளுடாக குடாநாட்டிற்கு அனுப்பப்படும்.

6. பாடசாலை சிறுவர்க்கான உபகரணங்கள்:- வட பகுதி பாடசாலை சிறுவர்க்கான உபகரணங்கள் தொடர்பாக இனி எந்த கட்டுப்பாடுகளும் இருக்கமாட்டாது.

சிறிய ட்ரான்ஸ்சிஸ்டர் வானொலி:- வடக்கிற்கு ட்ரான்ஸ்சிஸ்டர் வானொலிகள் அனுப்பப்படுவதை கூட்டுப்படை தலைமையகம் ஆட்சேபிக்காது.

ஒப்பம்
ஜெனரல் எச். வனசிங்க
கூட்டுப்படைத் தலைமையகம்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 20-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 9911

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-4465

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7941, 24-5529, 27-1939, 26-4510 26-3046
26-2135, 27-9492, 26-7627, 42-3368, 41-4194,
27-5187, 43-4045, 42-9326, 27-2084, 24-5774,
26-3410, 28-0912, 24-9676, 26-0649, 28-9634,
24-6699, 24-0336

### 21-06-93

எமதி பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9933

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-1320, 41-9652, 27-9033, 41-2479, 28-8444,
43-0517, 26-3812 25-6682, 26-8746, 27-5482,
41-7230, 41-6933 27-8160, 28-3233, 41-8096,
28-0159, 24-6448 41-9487, 28-4183, 27-9825,
41-5605, 26-3017 26-3183, 24-4726, 42-1722,
26-0355, 24-6533 26-0512, 27-9746, 27-4019,
24-4701

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-5590, 27-9416, 26-2277, 42-2157, 27-4070
40-6979, 26-0987, 26-5046, 26-3530, 27-7263
26-5112, 27-9105, 28-7978, CC-58065

## மரண அறிவித்தல்

## இராசையா செல்லம்மா

இராசையா செல்லம்மா 21.6.93, நேற்று காலமாகி விட்டார். இவர், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் ரவீந்திரன், பிறேமச்சந்திரன், ஜெயச்சந்திரன், மோகனச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிரவேல்பிள்ளையின் அன்பு அக்காவும் தம்பிராசா, தங்கம்மாவின் தங்கையாரும் சிவாந்தி, சிவானி, சியாமி, பிரியங்கா, பிறோமிகா, அபிசோக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நேற்று மாலை 4-00 மணிககு எழுதுமட்டுவாள் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
மோகன்
[மகன்]

(சி/6875)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.